ஞாலகுருவின் படைப்புக்கள்

# தாந்தரீகப் பூசை விளக்கம்

"...நமது மதம்தான்
நமக்குத் தன்னம்பிக்கை,
தன்மானம், இனமானம்,
மொழியுணர்வு, இன உரிமை,
பண்பாட்டுப் பிடிப்பு, நாகரிகப் பற்று,
இன விடுதலை, மொழி விடுதலை,
உரிமை வாழ்வு, ஒற்றுமை வாழ்வு,
ஒருமைப்பாடு, .....
முதலியவைகளை வழங்கிடும்!
வளர்த்திடும்! ..."



இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானச்சாரியார்,

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,123 பங்குனி மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

காணிக்கை: ரூ.10/-

# உள்ளுறை

1. **"தாந்தரீகப் பூசை விளக்கம்"** - குருதேவர் அருளிய விளக்கக் கட்டுரை. இந்தக் கட்டுரையில் உள்ள சில சிறிய பத்திகள் மூலம் குருதேவர் தாந்தரீகப் பூசையின் நோக்கத்தையும், பயனையும் விளக்குவதுடன்; இன்று நாட்டு வழக்கில் இருக்கும் கற்பனைகள் அனைத்தையும் சுட்டிக் காட்டுகின்றார்.
2. **"அ.வி.தி. செயல்வீரர் பயிற்சி முகாம்"** - அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் கீழ் செயல்படும் செயல்வீரர்கள் பெற வேண்டிய பயிற்சிகள், படித்துத் தேர்ந்திட வேண்டிய கட்டுரைகளின் தலைப்புக்கள், மக்களிடையே செயல்பட வேண்டிய விதங்கள், ... ஆகியனவற்றை விளக்கிடுகின்றார் குருதேவர்.
3. **"அருளார்ந்த அறிவுரை அஞ்சல்"** - கடந்தப்பட்டி கிராமத்தில் தயாராகி வரும் சித்தரடியான் ஒருவரின் பொருட்டு குருதேவர் அவர்கள் வெளிப்படுத்திய குருபாரம்பரிய வாசகங்கள் அடங்கிய அஞ்சல்.
4. **"நமது வரலாறுகளைக் காத்துத் தருவது நமது மதம்தான்"** - சிறுமுகையைச் சேர்ந்த சித்தரடியான் ஒருவருக்கு குருதேவரே தம் கைப்பட எழுதி அருளிய அஞ்சல் வடிவக் கட்டுரை.
5. **"பிரம்மை, பிரேமை சொல் விளக்கம்"** - குருதேவர் தலைமைப்பீடத்தில் அருளிய ஒரு சிறு குறிப்புக் கட்டுரை.
6. **"தமிழனுக்கென்று என்னென்ன சிறப்புக்கள் உள்ளன"** - 1994இல் நிகழ்ந்த சேலம் சுற்றுப்பயணத்தில் குருதேவர் கூறியவற்றிலிருந்து ஒரு சிறு பகுதி.

# தாந்தரீகப் பூசை விளக்கம்

1) பதினெண்சித்தர்கள் காற்றேடு காற்ருகக் கலந்திருக்கும் தெய்வீக அணுக்களை (The Divine Atoms) மனித உடலுக்குள் செலுத்திக் குறிப்பிட்ட மனிதனுக்கு எல்லா நன்மைகளும், 'இயற்கை கடந்த மனிதர்' (The Super Man) என்ற நிலையை உருவாக்கும் முறையாக வகுத்ததுதான் இந்தத் தாந்தரீகப் பூசை.

2) அச்சம், கூச்சம், இச்சை, ஆச்சரியம், மாச்சரியம், வெறுப்பு, ... முதலிய உணர்வுகளைக் கடந்து குருவிடமும், குருவின் வாரிசுகளிடமும், குருவின் பதிலிகளிடமும் இப் பூசைகளைச் செய்து கொள்ளலாம். பிறப்பு, இறப்பு வெல்லும் முயற்சியின் முதிர்ச்சியே இப்பூசை. முற்பிறப்பு, மறுபிறப்புகளை உணரும் முயற்சிகளின் முதிர்ச்சியே இப்பூசை. உருவ, அருவ, அருவுருவங்களைத் தெரிந்து தொடர்பு கொள்ளும் முயற்சியின் முதிர்ச்சியே இது. உடலும், உள்ளமும் பூக்கும் புதுமலரின் மணமும், இனிமையும் பெறும் முயற்சியின் முதிர்ச்சியே இது. பதினெண்சித்தர்கள் பெண்களைச் சத்தியாகவே ஏற்று வழிபட்டனர் என்பதையும்; கல், மண், மரம், உலோகம், ... முதலியவற்ருல் ஆன பொம்மைகளைக் கடவுள்களாக்குவது போல உயிரும், உணர்வும், அறிவும் உள்ள பெண்களைக் கடவுள்கள் ஆக்கிஞர்கள் என்பதையும் விளக்குவதே தாந்தரீகப் பூசை.

3) அளவுக்கு அதிகமான பொறுமை, பொறுப்பு, துணிவு, கனிவு, கூர்மை, நேர்மை, சீர்மை, குருவின் நம்பிக்கையும், வாழ்த்துதலும் பெற்ற பெருநிலை, ... முதலியவைகளைப் பெற்றவர்களே தாந்தரீகப் பூசை செய்ய முடியும். மண்ணிலும், விண்ணிலும் நிறைந்துள்ள தெய்வீக சத்திகளை அநுபவப் பூர்வமாகப் பெண்ணின் உடலுக்கு வரவழைத்துத் தேக்கிப் பிறகு தேவைக்கேற்ப எடுத்து வழங்கும் அருட்கொடைத் திட்டமே இந்தத் தாந்தரீகப் பூசை.

4) இன்றைய நிலையில் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி ஒருவரால்தான் குருவின் விந்துவழி வாரிசுகள் அல்லாத சாதாரணப் பொதுமக்களும் இந்தத் தாந்தரீகப் பூசையைப் பெறக் கூடிய அரிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஏனெனில், இதுவரை பதினெண்சித்தர் பீடாதிபதிகள் மட்டும்தான் இப்பூசைகளை முழுமையான வெற்றியுடன் செய்து வந்தார்கள். அவர்களுடைய விந்துவழி வாரிசுகளால் கூட பதினெண்சித்தர் பீடாதிபதிகளைப் போல் இத் தாந்தரீகப் பூசைகளை முழுமையாக வெற்றியுடன் செய்ய முடியவில்லை.

எனவேதான், யாம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, அருட்கொடை வள்ளல் என்ற நிலைகளுக்கேற்ப இந்தத் தாந்தரீகப் பூசை முறையை எம் காலத்தில் எமது நம்பிக்கைக்குரிய, ஆனால் சித்தர்களின் பாரம்பரியத்தைச் சேராத மற்றவர்களிடையேயும் இப்-பூசையைச் செய்யக் கூடிய ஆற்றல் படைத்தவர்களை உருவாக்கும் மாபெரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். அதற்குரிய ஏட்டறிவையும் (Theoretical Knowledge), சோதனைச்சாலையின் பயிற்சி அறிவையும் (The Laboratory Experimental Knowledge) வழங்கும் முயற்சியாகவே இன்றைய அருட்பணி விரிவாக்கத் திட்டத்தைச் செயலாக்கி வருகிறோம் யாம். இம் மாபெரும் வாய்ப்பை ஊழ்வினை, விதி, ஓகம், ... உள்ளவர்கள்தான் முழுமையாக அநுபவிக்க முடியும். உலகியல் கடந்து குருவிடம் தங்களை முழுமையாக ஒப்படைக்கும் **‘சரணாகதி நிலை’**யினரே தாந்தரீகப் பூசைகளில் வெற்றி பெறுவர் என்பதால் தேர்ந்தெடுத்த சித்தரடியான்கள், சித்தரடியார்கள், சித்தரடியாள்கள் ஆகியவர்கள் மூலம் செயலாக்கி வருகிறோம் யாம்.

5) பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய யாம், குரு பாரம்பரிய மரபுகளையும், இலக்கிய பாரம்பரிய மரபுகளையும்; கருநிலை, குருநிலை, தருநிலை, திருநிலை, அருள்நிலை, மருள்நிலை எனும் ஆறுவகைப்பட்ட நிலைகளுக்குரிய வாக்கு, வாக்கியம், வாசகம்

என (மொத்தம் 6 x 3 = 18) பதினெண்சித்தர்களின் பதினெட்டு வகையான அருள் இலக்கியங்களையும் பயன்படுத்தி "வாருங்கள் மானுடரே! உங்களைக் கடவுளாக்குகிறேன்" என்று சாதி, மதம், இனம், நாடு, மொழி என்ற வேறுபாடுகளையெல்லாம் கடந்து அனைவரும் அருளின்பம் துய்க்குமாறு செய்ய அருளை வாரிவாரி வழங்கி அருட்கொடை வள்ளலாக விளங்குகிறோம்.

6) மனிதப் பிறவியின் பயன், உண்மைநிலை,... முதலிய அனைத்தையும் உணரச் செய்வதே தாந்தரீகப் பூசை. பதினெண்சித்தர்களின் தாந்தரீகப் பூசை ஏட்டில் எழுதப்படாதது. ஆரிய மாயையாகப் பல தாந்தரீகப் பூசைகள் உள்ளன. எனவே, பாரம்பரியச் சித்தர்களிடம் தாந்தரீகப் பூசைகளை அறிக. **குருவால் இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் வழங்கப்படுபவரே முழுமையான அருள்நிலைகளைச் சித்தி செய்து கொள்ள முடியும்.**

7) பீடாதிபதிகளின் காலத்திலும், அதற்குப் பிறகும், ஒருவர் சொல்ல மற்றொருவர் எழுதுகின்ற நேரத்திலும், நகலெழுதுகின்ற நேரத்திலும் மிகவும் நம்பிக்கைக்குரிய அடியானாக, அடியாளாக, அடியாராக இல்லாத சாதாரண மனிதர் கூட ஓலைநாயகங்களாகப் பயன்படுத்தப்பட்டிடும் வழக்கம் இருந்திருக்கின்றது. அதன் காரணமாகப் பதினெண்சித்தர்களின், பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் குறிப்பிட்ட பல பூசா இரகசியங்கள் பெயரளவிலும், சொல்லளவிலும், வாசகங்கள் அளவிலும் பிறர்க்குத் தெரிய நேரிட்டு விட்டது.

அதாவது, உரிய தகுதியில்லாதவர்கள் கூட; உரிய தொடர்பில்லாதவர்கள் கூடத் தம்முடைய உரைகளிலும், பேச்சுக்களிலும், எழுத்துக்களிலும் தங்களை மிகப்பெரிய அருளுலகவாதிகளாகக் காட்டிக் கொள்வதற்காகத் தங்களுக்குத் தெரிந்த பதினெண்சித்தர்களின், பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் குரு பாரம்பரிய, இலக்கிய பாரம்பரிய வாக்கு, வாக்கிய, வாசக, முறை, நெறி, வேத, நாத, சித்த, போத, ஓத, விரிச்சி,

ஓச்சு, ... எனும் **எண்ணற்ற வகையான அருளிலக்கியங்களில் இருந்த சொற்களையும், வாசகங்களையும் தாராளமாக எடுத்துப் பயன்படுத்தி விட்டார்கள்**. தங்களுக்குப் பொருள் தெரியாத சொற்களையும், சொற்றொடர்களையும், குறிப்புக்களையும் தாங்கள் முழுமையாகப் புரிந்து கொள்ளாமலும், தங்களுக்கு எள்முனையளவு கூடச் செயல்படுத்த முடியாது என்பது நன்கு தெரிந்திருந்தும்; புகழுக்காகவும், பெருமைக்காகவும் பயன்படுத்திச் சென்று விட்டார்கள்.

அதை காலப்போக்கில் நாடோடிப் பாடல்களாகவும், பலரின் ஞானப் பாடல்களாகவும் பொதுமக்கள் பெற நேரிட்டு விட்டது. ஏனெனில், பின்னால் வந்த பத்தியாளர், சத்தியாளர், சித்தியாளர், முத்தியாளர் போன்றவர்கள் மேற்படி இலக்கியங்களைப் படித்துத்தான் தயாரானவர்கள் என்பதால்; அவர்கள் தாங்களும் மேற்படிச் சொற்களுக்குப் பொருள் புரியாமல், அநுபவ அறிவும் இல்லாமல், அநுபவ அறிவுள்ள யாரையும் கேட்காமலும், தாங்களும் அவற்றின் பொருட்களைக் கண்டறிய முற்படாமலும், தங்களுடைய எழுத்துக்களில் பயன்படுத்திச் சென்று விட்டார்கள்.

அப்படிப் பிற்காலத்தவர்கள் செயல்பட்டிட்ட காரணத்தினால்தான்; அருளுலகத்தில் குருமொழி என்பவைகளும், ஞானப் பாடல்கள் என்பவைகளும், அருளுரைகள் அருட் பாடல்கள் என்பவைகளும், ... பெரும்பாலும் வெறும் சொல் விளையாடல்களாகவும், செயலுக்கு வராத கற்பனைகளாகவும், சிறுபிள்ளைகளின் கதைகளாகவும்; பகுத்தறிவு வாதிகளாலும், நாத்திகர்களாலும் அறிவிற்கு ஒவ்வாதவை, நம்பத் தகாதவை, பயனற்றவை, மடமையானவை, முன்னேற்றத்திற்குத் தடையானவை, மூடநம்பிக்கையானவை, மனித சமுதாயத்திற்கே தீமை விளைவிக்கக் கூடிய கொடிய நோய் போன்றவை, மயக்க மருந்து போன்றவை, ... என்றெல்லாம் கடுமையாகக் கண்டிக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டு விட்டது.

இதேபோலத்தான் மாந்தரீகம், தாந்தரீகம், மந்திறம், கலச பூசை, சுடுகாட்டுப் பூசை, கூடுவிட்டுக் கூடு பாய்தல், ககனமார்க்கமாகப் பயணப்படுதல், சித்து விளையாடுதல், சிலைகளுக்கு உயிரூட்டுதல், குடமுழுக்கு, மந்திரித்தல், அருளாடுதல், மருளாடுதல், ... முதலிய செயல்கள் எல்லாமே கற்பனையானவைகளாகவும், செயலுக்கு வராதவைகளாகவும், தவறுனவைகளாகவும், பயனற்றவைகளாகவும், அருள்வழங்கக் கூடிய அருளூற்றுக்களையெல்லாம் பெரிய அளவில் பாதிப்பவைகளாகவும்; அருள் வேண்டும் பத்தர்களையெல்லாம் ஏமாற்றுபவைகளாகவும் ஆகிவிட்டன.

ஏனெனில், மேற்படிச் சொற்களின் பொருளே தெரியாமல், அவற்றை எப்படி செயல்படுத்துவது என்பது தெரியாமலும், தங்களுக்குத் தெரிந்தவைகளாகக் காட்டிக் கொள்ளுபவர்களுமாக இருக்கின்ற போலிகளே பெரும்பாலும் மதத் தலைவர்களாக, குருமார்களாக, குருபீடங்களாக, ஆச்சாரியார்களாக, சாத்திரிகளாக, பூசாறிகளாக நமது மதத்தில் செயல்பட ஆரம்பித்திட்டார்கள். எனவேதான், நமது மதம் அருளை வழங்க வல்ல அநுபூதிமான்களை, நாயன்மார்களை, ஆழ்வார்களை, அடிகளார்களை, ... எண்ணிக்கையில் அதிகமாக உருவாக்க முடியாத நோய் நிலையையும், நலிந்த நிலையையும் பெற்றுவிட்டது.

இவற்றிற்கெல்லாம் மேலாக ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் இந்த நாட்டிற்கு அன்னியர்களாகிய 'பிறமண்ணினரான பிருமணர்கள்' என்னும் வடஆரியர்களையும், அவர்களுடைய சமசுக்கிருத மொழியையும், வேத மதத்தையும் இந்நாட்டின் அருளுலகத்தவர்கள் ஏற்றுக் கொள்ளாத காரணத்தினுலும் நமது இந்துமதம் அன்னிய மதங்களின் வேட்டைப் பொருளாகி விட்டது. கண்மூடித்தனமான நாத்திகர்களும், பயனற்ற பகுத்தறிவுவாதிகளும், முறையான சிந்தனையற்ற சீர்திருத்தவாதிகளும்; மதத்துறையின் நிறைந்த அறிவோ, தொடர்ந்த

முறையான பயிற்சிகளோ, முழுமையான நம்பிக்கையோடு கூடிய ஈடுபாடோ இல்லாத மிகச் சாதாரண தன்னல வெறியர்களும்; எண்ணிக்கையில் மிகுதியாக இந்துமதத்தின் மடாதிபதியாகவும், பீடாதிபதியாகவும், குருபீடமாகவும், ஆச்சாறியாராகவும் பதவியேற்க நேரிட்டு விட்டது. இவற்றால்தான், நமது இந்துமதம் நலிந்தது, மெலிந்தது, தேய்வுற்றது, நோயுற்றது போன்ற நிலைகளை அடைந்தது. எண்ணற்ற தயக்க மயக்கங்களையும், தேக்க வீக்கங்களையும், அடக்க ஒடுக்கங்களையும், தவறான வழிநடத்தல்களையும் பெற நேரிட்டு விட்டது.

இவற்றையெல்லாம் மிகவும் பொறுப்போடும், பொறுமையோடும், நிதானத்தோடும், சமாதானத்தோடும் சிந்தித்துத் தேவையான முடிவுகளை எடுத்துச் செயல்படப் புறப்பட்டிருக்கிறோம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய யாம். எமது செயல்கள் ‘எடுத்தோம், கவிழ்த்தோம்’ என்பது போல் அமைந்து விடாமல்; எமது சிந்தனைகளையும், தெளிவான கொள்கைகளையும், குறிக்கோள்களையும், செயல்திட்டங்களையும் விளக்கிச் சிறியதும் பெரியதுமாக நூறாயிரக் கணக்கில் அஞ்சல் கட்டுரைகள், சிறிய சிறிய கட்டுரைகள், நூற்றுக்கணக்கில் நூல்கள் எழுதியுள்ளோம், தொடர்ந்து எழுதி வருகிறோம்.

இவற்றில் யாம் நேரடியாக, பச்சையாக, கொச்சையாக யாரையும் விமரிசிக்க முற்பட்டதில்லை; தாக்கிப் புண்படுத்த விரும்பவில்லை. எம்மை அறியாமல் அப்படி ஏதாவது எமது எழுத்துக்களில் இருந்திடுமோ என்று அஞ்சித்தான் யாம் அளப்பரிய நாகரிகத்தோடும், பண்போடும், பணிவோடும், அடக்கத்தோடும் அடிக்கடி எமது பேச்சிலும், எழுத்திலும் யாம் வழங்கும் செய்திகளோ, கருத்துக்களோ யார் மனதையும் புண்படுத்தினால், அதற்கு மன்னிப்பு வேண்டுகோள் விடுத்து வருகின்றோம். ஆனால், யாம், இன்றைய உலகியலுக்கு

அஞ்சி எந்த உண்மைகளையும் மறைக்கவோ, குறைக்கவோ அல்லது வெளியிடாமல் நிறுத்தி விடவோ இயலாது.

ஏனென்றால், யாம் பதினெண்சித்தர் பீடாதிபதியாகப் பாலுகப் பருவத்திலேயே பொறுப்பேற்ற காலத்திலேயே இதற்குரிய உறுதிமொழிகளையெல்லாம் அருளுலகத்தார் அனைவர் முன்னிலையிலும் வழங்கியிருக்கின்றோம். எம்மை வளர்த்து ஆளாக்கிய எந்தையும், **'எப்பொழுதும் எனக்கு முந்தைய செய்திகளையும், கருத்துக்களையும் மறைக்காமல், குறைக்காமல், வெளியிடாமல் தயக்கம் செய்து ... செயல்பட்டு விடக் கூடாது! செயல்பட்டு விடக் கூடாது! செயல்பட்டு விடக் கூடாது! செயல்பட்டு விடவே கூடாது!'** என்று கூறிச் சென்றுள்ளார். அதற்குரிய சத்தியங்களையும் (வாக்குறுதிகளையும்) எம்மிடம் வாங்கிச் சென்றுள்ளார்.

எனவேதான், <u>தாந்தரீகப் பூசை பற்றிய கற்பனைகளும், தவறான செய்திகளும், அச்சங்களும், கூச்சங்களும், மாச்சரியங்களும், ... நம் நாட்டில் உலவி வருவதைத் தடுக்கவும்; அவற்றைப் பற்றிய உண்மைகளை ஓரளவாவது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்</u> என்பதற்காகத்தான் யாம் உலகியலுக்காக அச்சமோ, கூச்சமோ அடையாமல் தாந்தரீகப் பூசைகள் பற்றிய பேருண்மைகளை விளக்கி உரைக்க முன் வந்திருக்கின்றோம். வாய்ப்பிருக்கும் போது மேலும் விளக்கி உரைக்கிறோம்.

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் சுந்தரானந்தாவின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# அ.வி.தி. செயல்வீரர் பயிற்சி முகாம்

1) நம்மவர்களில் ஆர்வமுடையவர் அனைவரும் அருளுலக அநுபவங்களைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான்; அனைவர்க்கும் அருட்பட்டங்கள் வழங்கி, ஓரளவு இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் வழங்கி அவரவர் விருப்பம் போல் அருளூறு பூசாமொழி வாசகங்களை ஓதி அருட்செல்வம் பெற்றும்; பிறருக்கு அருட்செல்வத்தை வழங்கியும் செயல்படத் திருவாணை பெற்றுக் குருவுளச் சம்மதம் வழங்கினோம் யாம். ஆனால், யாரும் முறையான பயிற்சிகளையோ, நிறைவான முயற்சிகளையோ செய்யாமல்; தங்கள் தங்களுக்குக் கிடைத்த அற்ப சொற்ப அருட்சத்திகளால் அகம்பாவமும், ஆணவமும், நானென்ற வீம்பும் உடையவர்களாக வளர்ந்து; குருவுக்கும், இயக்கத்துக்கும், அ.வி.தி.க்கும் தேவையில்லாத தடங்கல்களை விளைவிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

எனவே, அனைத்து வட்டாரத்து அ.வி.தி. செயல்வீரர்களும் தங்களின் மற்ற செயல்களையெல்லாம் நிறுத்தி விட்டுத் தம்மிடம் வருவோர்க்குக் கலசம் தயாரித்து வழங்கிக் கலசப் பூசை செய்யுமாறும், ஆங்காங்குள்ள அருட்கோட்டங்களில் வந்து வணங்கி வாழ்த்துப் பெற்றுச் செல்லுமாறும் பரிந்துரை செய்தால் போதும். விரைவில் அ.வி.தி. செயல்வீரர் பயிற்சி முகாம், வாரத்துக்கு மூன்று நாட்கள் வீதம் அடிக்கடி தொடர்ந்து நிகழ்த்தப்பட்டிடும். அதில் பங்கு பெற்று ஓரளவாவது தயாரான பிறகுதான் தலைமைப் பீடத்தின் சான்றிதழும், ஒப்புதலும், குறிப்பிட்ட வட்டாரத்தில் செயல்படுவதற்குரிய ஆணையும் பெற்றுச் சென்று செயல்பட்டுத்தான் இயக்கம் வளர்க்க வேண்டும்.

2) அ.வி.தி. செயல்வீரர்களுக்கு முறையான ஏட்டறிவும், பட்டறிவும் பயிற்சியாகத் தரப்படாததால்;

√ ‘மெய்யான இந்துமதம்’,

√ ‘பதினெண்சித்தர்கள்’, ‘பதினெண்சித்தர் பீடாதிபதிகள்’, ‘நாற்பத்தெட்டு வகைச் சித்தர்கள்’,

√ ‘நாற்பத்தெட்டு வகை வழிபாட்டு நிலையங்கள்’, ‘நூற்று நாற்பத்து நான்கு வகைக் கருவறைகள்’,

√ ‘நாற்பத்தெட்டு வகை அருட்பட்டத்தார்கள்’,

√ ‘எண்வகை மூல ஆச்சாரியார்கள்’,

√ ‘கருவழி ஆச்சாரியார்கள், குருவழி ஆச்சாரியார்கள், பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள்’,

√ ‘குரு நிலையினர், குருமார் நிலையினர், குருக்கள் நிலையினர், பூசாறியினர் எனப்படும் சமய நால்வர் நிலை’,

√ ‘ஆறுவகைப்பட்ட சமயங்களும், அவற்றுக்குரிய பதினெட்டு வகை நூல்களும்’,

√ ‘பயிற்சியாலும், முயற்சியாலும் மட்டுமின்றிக் குருவருளால் பெற வேண்டிய பத்தி நிலை, சத்தி நிலை, சித்தி நிலை, முத்தி நிலை, ... என்று நான்கு வகை **ஆன்மீக நிலைகள்**’,

√ ‘ஊழ்வினை, விதி, சூழ்வினை, வினை, ஆள்வினை, மதி எனும் **மானுட ஆட்சி நிலைகள்** ஆறு’,

√ ‘குருவையும் மறந்து, துறந்து, மறுத்து, வெறுத்து, எதிர்த்து, பகைத்து செயல்படச் செய்யும் அகம்பாவம், ஆணவம், கன்மம், மாயை, வம்பு, வீம்பு எனும் **மானுட ஊறு நிலைகள்** ஆறு’, ...

முதலிய இன்னோரன்ன பல அடிப்படைச் செய்திகளைத் தெரியாமலும், புரியாமலும் செயல்பட்டுப் பல தேக்க வீக்கங்களும், கலக்கக் குழப்பங்களும் உண்டாகி விட்டன.

3) அ.வி.தி. பணிகளில் ஆங்காங்கு ஈடுபட்டுள்ள நமது செயல்வீரர்கள், அதில் என்னென்ன பக்குவ நிலையினர், என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டுமென்று திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளாமல் இருக்கின்றார்கள். அதனால், பல குழப்பங்களும், செயல் தடுமாற்றங்களும் ஏற்படுகின்றன.

i. <u>முழுக்க அ.வி.தி. பணிக்கே தன்னை ஈடுபடுத்திக் கொள்ள</u> **<u>விரும்புகிறவர்கள்</u>** மட்டுமே 'புத்துயிர்ப்பு', 'உயிர்ப்பு', 'ஓம ஓக யாக யக்ஞ வேள்விகள்', 'பூசை', 'தவம்', ... முதலியவைகளை முன்னின்று நடத்த முடியும். இதற்காகக் குருதேவரால் இட்டும் தொட்டும் சுட்டியும் அருள்பெற வேண்டும். ஆறுகாலப் பூசைகள் பற்றிய பேருண்மைகளை குருவருகில் இருந்து அணுக்கத் தொண்டு புரிந்து கற்றுக் கொள்ள வேண்டும். குருவழிச் சேரலால் மெய்யில் அருளூறு பூசாமொழிகள் எழுதப் பெற்றுக் கொள்ள வேண்டும். **<u>நவநஞ்சுச் சூரணம்</u>**, காயகல்பப் பச்சிலைகள், மூலிகைகள், ... குருவால் அருளப் பெற்றுத் துய்த்தல் வேண்டும். முடிந்தவரை தங்களுக்குரிய அருட்பட்டத்துக்கு உட்பட்ட அருளுலகத்தவர்களையாவது சித்தி செய்து கொள்ள வேண்டும். அவ்வப்போது கலசப் பூசைகளாலும், கருவறைப் பூசைகளாலும் தங்களை வலிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். ... இவையெல்லாம் நிலைத்து நிற்பதற்காகக் கட்டாயமாகத் தாடி, மீசை, முடி வளர்க்க வேண்டும்.

ii. <u>அ.வி.தி. மாவட்ட, வட்டார, வட்டச் செயல்வீரர்கள்,</u> ... இவர்களில் தங்களுக்கு மிகப் பெரிய சித்திகளும்; அருளாட்சியில் உரிய பதவிகளும், பெருமைமிகு நிலைகளும் வேண்டுமென்று விரும்புகிறவர்கள் மட்டுமே தாடி, மீசை, முடி வளர்க்க வேண்டும். மற்றவர்கள் சன்னிதான உடையணிந்து திரிசூலம், மயில்பீலி ஏந்தி அ.வி.தி. பணி ஆற்றலாம். இவர்கள் ஊர் ஊராகச் சென்று வார வழிபாட்டு மன்றங்கள், மகளிர் வார வழிபாட்டு

மன்றங்கள், அருட்கோட்டங்கள், உழவாரப் பணி, **மெய்யான இந்துமதம்** பற்றிய விரிவுரையாற்றல், அ.வி.தி.க்கும், இ.ம.இ.க்கும் உறுப்பினர்களைச் சேர்த்தல், ... முதலியவற்றைச் செய்யலாம். இவர்களில் தொடர்ந்து 48 நாட்களுக்கு ஒருமுறை கலசப் பூசையை நிறைவு செய்து; மீண்டும் மீண்டும் கலசப் பூசை செய்து வருபவர்கள் பிறருக்கு அருள் வழங்கலாம். தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளும், அம்மையப்பன் துணையும் பெற்றுப் பிறரின் நோய் நிலைகளுக்கும், பேய் நிலைகளுக்கும் நலம் வழங்கும் பரிகாரப் பூசைகளைக் குருவழியாக ஒவ்வொரு பாதிப்பாளர் பற்றிய செய்திகளையும் குருவுக்குத் தெரிவித்துக் கேட்டறிந்த குறிப்பின்படி செய்யலாம். இவர்கள், இ.ம.இ. வளர்க்கப் பாடுபட வேண்டும். இ.ம.இ.யின் வெளியீடுகளை விலைக்கு விற்கவும், இலவசமாக வழங்கும் அறிக்கைகளை வழங்கியும் செயல்படல் வேண்டும்.

iii. **<u>இ.ம.இ. உறுப்பினர்கள்:</u>** இவர்கள் அன்றாடம் தங்களின் அருட்பட்டங்களுக்கு உரியவர்களைச் சித்தி செய்து கொள்ளக் கலசப் பூசை செய்யலாம். விருப்பமான தெய்வங்களை குறிப்பிட்ட **<u>கோயில்களில்</u>** சென்று ('கோயில்' என்ற சொல் 48 வகைக் கருவறை, 48 வகை வெட்டவெளிக் கருவறை, 48 வகை வழிபாட்டு நிலையங்கள் எனப்படும் 144 வகைகளையும் குறிக்கும்.) வழிபடலாம். இ.ம.இ. உறுப்பினர் சேர்த்தல், கிளை அமைத்தல்; அ.வி.தி.யினர் செயல்நிலைகளுக்குப் பேருதவி புரிதல்; தமிழின மொழி மத விடுதலை இயக்கம் வளர்த்தல்; நாடு தழுவி இ.ம.இ. வளர்ச்சிக்காக அ.வி.தி. வழியாக மக்கள் தொடர்பு கொள்ளுதல்; அருளுலகச் சத்தி சித்தி பெறல்; தமிழ் மொழியிலும் இலக்கியத்திலும் வளவளர்ச்சி பெறல்; தமிழினக் கொள்கையில் உயர்ச்சியும், பயிற்சியும், முயற்சியும் பெறல்; ... முதலிய நன்மைகளை, பயன்களை அடைகிறவர்களே அவிதியில் உறுப்பினர்களாகச்

சேர்க்கப்படுகிறுர்கள். **இவர்கள் தொடர்ந்து விருப்பத்தாலும், அளப்பரிய ஆர்வத்தாலும், அநுபவம் விளேவிக்கும் நம்பிக்கையாலும் அ.வி.தி.யினர் நிகழ்ச்சிகளில் பங்கு பெறுபவர்களே; நேரில் அ.வி.தி. பயிற்சி முகாம்களுக்கு அழைக்கப்பட்டுத் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு ஒரு பயிற்சி என்று வழங்கப்படுகின்றனர்**.

**குறிப்பு:- அவரவர் விருப்பம், வசதி, வாய்ப்புக்களுக்கேற்பவும்; தேர்ச்சி முதிர்ச்சிகளுக்கேற்பவும் எத்தனே பயிற்சி முகாம்களில் வேண்டுமாஞலும் பங்கு பெறலாம்.**

**iv.** அ.வி.தி. செயல்வீரராகத் தயாரிக்கப்பட்டு; அருளுலகப் பொருளுலக ஒப்புதலும், அறிவிப்பும் பெற்றுக் **குறிப்பிட்ட வட்டாரங்களுக்குள்ளோ! அல்லது நாடு தழுவியோ! 'அருட்பணி விரிவாக்கத் திட்டத்தை**'ச் செயலாக்குபவர்கள் கட்டாயமாக **'இந்து மறுமலர்ச்சி இயக்கத்திலும்**' உறுப்பினராகி முதன்மையான ஆக்கப் பணிகளேச் செய்ய வேண்டும். (இயலாவிடில் குருதேவரிடம் தனித்த ஒப்புதல் பெறல் வேண்டும்.)

**v.** இ.ம.இ.யில் இருப்பவர்கள் சாதாரண சட்டை அணிந்திருந்தால் போதும். இதில் **இயக்கத்தில் பெரிய பதவிகளே ஏற்றிருப்பவர்கள் மட்டும் (தலேவர், செயலர், அமைப்பாளர், பொறுப்பாளர் ...) கட்டாயமாகச் சிவப்பு வேட்டியும், சிவப்புச் சட்டையும் இயக்க நிகழ்ச்சிகளின் போதாவது அணிந்திருக்க வேண்டும்**. மற்ற நேரங்களில் வேட்டி, சட்டை, துண்டு, ... இவற்றில் ஏதாவது ஒன்று மட்டும் சிவப்பாக இருந்தால் கூடப் போதும்.

**vi.** இ.ம.இ. உறுப்பினர்கள் நிகழ்ச்சிகளில் பங்கு பெறும் போது முடிந்தவரை (மெய்ஞ்ஞானக்கொடி சதுரமான கம்பியில்

சேர்த்துத் தைக்கப்பட்டிருக்கும், பறக்காது.) மெய்ஞ்ஞானக்கொடியைப் பிடித்து வர வேண்டும்.

**vii. <u>குறிப்பு:-</u>** அ.வி.தி. உறுப்பினர் கட்டாயமாக பொது நிகழ்ச்சிகளுக்கு வரும்போது மெய்ஞ்ஞானக்கொடி கொண்டு வர வேண்டும்; ஒப்புதல் பெற்ற அ.வி.தி. செயல்வீரர்கள் மெய்ஞ்ஞானக் கொடி, திரிசூலம், மயில்பீலி கொண்டு வர வேண்டும்; சன்னிதான உடையில் வர வேண்டும். தாடி, மீசை, முடி வளர்த்தவர்கள் எல்லா நிகழ்ச்சிகளிலும் முன்னின்று தலைமை தாங்கி வழி நடத்துவார்கள்.

**viii.**

a. அ.வி.தி.யில் வெள்ளை வேட்டி சட்டை அணிந்து மெய்ஞ்ஞானக்கொடி மட்டும் கொண்டு வருபவர்;

b. இ.ம.இ.க்காக ஏதேனும் ஒரு சிவப்பு ஆடை (வேட்டி, சட்டை, துண்டு, ...) அணிந்து மெய்ஞ்ஞானக்கொடி ஏந்துபவர்;

c. சிவப்பு வேட்டி, சிவப்புச் சட்டை அணிந்து மெய்ஞ்ஞானக்கொடி ஏந்தும் இ.ம.இ.யினர்;

d. சன்னிதான உடையில் திரிசூலம், மெய்ஞ்ஞானக்கொடி, மயில்பீலி ஏந்துபவர்;

e. தாடி, மீசை, முடியுடன் சன்னிதான உடையில் திரிசூலம், மயில்பீலி, மெய்ஞ்ஞானக்கொடி ஏந்துபவர்;

என்று **ஐந்து வகையினர்** இ.ம.இ., அ.வி.தி. நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவர்.

**ix.** மிகுந்த அருளாற்றல் பெற்றும்; குருதேவருக்கு நேரடியாகப் பழம்பிறப்புக்களிலும், இப்பிறப்பிலும் உறவு முறைகளையும், உரிமைச் சுற்ற நிலைகளையும், பதிலி நிலைகளையும், வாரிசு நிலைகளையும் பெற்றும், ... **பல்வேறு உலகியல் காரணங்களால்**; **குருதேவராலேயே அருளுலகப் பொருளுலக ஒப்புதலும், சம்மதமும் பெறப்பட்டுச்**

சிறப்பு அநுமதி வழங்கப் பெற்றவர்கள் சிலர் குறிப்பிட்ட கால அளவுக்கு ஒரு முறை தாடியையும், மீசையையும் அகற்றி அகற்றிக் குருவாணைப்படி அம் முடிகளை கலயத்தில் பாதுகாப்பதின் மூலம் "மறைமுக (இரகசிய) முழுநேர அ.வி.தி. செயல்வீரராகச் செயல்படலாம்" என்று அமராவதியாற்றங்கரைக் கருவூரரின் குருபாரம்பரிய மரபு கூறுகிறது.

[The People who work as 'The Secret Polit Bureau Members' and as 'The Secret Intellectual Department Members' of 'The Indhu Marumalarchy Iyakkam' have been sanctioned special exceptions in the rules, regulations and systematic services of the Regular Party. Even then they are admitted as the 'Extremists and as well as the 'Full Time Workers'. So, this important hereditary policy must be clearly understood by one and all of the party men. Then only the unnecessary murmurs, rumours, accusation of partialities and all other misunderstandings and unnecessary envious contradictions and complications between the party members can be prevented. This is the Divine Command and Divine Order of the Founder of the INDU MARUMALARCHY IYAKKAM. His Holiness Guru Mahaa Sannithaanam Gnaalaguru Siddhar Amaraavathi Atrangkarai Karuwooraar. The Xth Pathinen Siddhar Peedam 100 B.C. to 150 A.D.]

அருளாட்சிக்காக அதன்படியே இன்று சிலருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இவர்கள் அவ்வப்போது குருதேவரைச் சந்தித்து நேரடிப் பயிற்சிகளைப் பெற்று வளர வேண்டும்.

இப்படி இ.ம.இ., அ.வி.தி. உறுப்பினர்களை பயிற்சி கொடுத்து உருவாக்குவதற்காகத்தான் ஆர்வமுள்ளவர்களை சென்னைக்கே

வரவழைத்து 2 அல்லது 3 நாட்கள் தங்கிப் பயிற்சி கொடுக்கச் செயல்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இப்படிப் பயிற்சி பெற விரும்புபவர்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம். தாம் யாராக அல்லது எந்த நிலையில் பயிற்சி பெற விரும்புகிறார்கள் என்பதையும் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். இந்தத் தலைமைப்பீடத்தின் அறிவிப்பை ஏற்று வருபவர்கள் முன்கூட்டியே தெரிவித்து விட்டு வரலாம்.

**தொடர்பு:-**

தலைமைப்பீடச் செயலகம்,

8, சண்முகம் சாலை, விசயலக்குமி நகர், கொளத்தூர், சென்னை-600099.

**நகல் நல்குபவர்**:-

அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், குருவழி வாரிசு, குருவின் பதிலி, பரமாச்சாரியார் சீ.மணி, 15/11/88.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# அருளார்ந்த அறிவுரை அஞ்சல்

தலைமைப்பீடம்,
6/4/88.

அருள்மிகு சித்தரடியான் திரு பாலசுப்பிரமணி அவர்களுக்கு ஞானாச்சாரியார், நான்குயுக நாயகம், தத்துவ நாயகம், பரபிறம்மம், எல்லாம் வல்ல சித்தர், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களின் தலைமைப்பீடம் விடுக்கும் 'அருளார்ந்த அறிவுரை' அஞ்சல்.

(1) தங்களின் அஞ்சல் கிடைத்தது. தங்கள் குடும்பத்தில் நிறைய சிக்கல் இருப்பதால் தாங்கள் அனுப்பும் அஞ்சலுக்கு ஒரு நகல் வைத்து எழுதி நகலைத் தங்கள் கோப்பில் பாதுகாத்திடுங்கள். தங்களுடைய அஞ்சல் சித்தரடியான்கள் அண்ணாமலை, ஏகாம்பரம் ஆகியோரின் கையொப்பத்துடன் தான் தலைமைப்பீடத்திற்கு வர வேண்டும். இது **குருவாணை**.

(2) **"அருளுலக பாதுகாப்புக்களையும், சத்தி சித்தி முத்திகளையும் வேண்டுபவர்கள் கிணற்று நீராக இருக்கின்ற குருதேவரின் அருளை முயற்சி என்கின்ற நெடுங்கயிற்றையும், முழுமையான நம்பிக்கை மிக்க குருபத்தி எனும் தோண்டியையும் பயன்படுத்தித்தான் இறைத்து; நீராடியும், தாகம் தீர்த்தும், உணவு சமைத்தும், புறத் தூய்மைகளைச் செய்தும் வாழ்ந்திடல் வேண்டும்."** - இந்தக் குருபாரம்பரிய வாசகப் படி உங்கள் குடும்பத்தவர் அனைவரும் குருபத்தியில் சிறந்தவர்களாக, பூசைகளில் முயற்சியுடையவர்களாக, இயக்கத்தில் ஈடுபாடு உடையவர்களாகப் பக்குவம் பெறுவதற்கு ஏற்பத்தான்

எல்லா நலன்களும், பாதுகாப்பும் கிடைக்கும். வேறு வழியில்லை. வருந்த வேண்டாம். எல்லாம் விதிப் பயனே! ஊழ்வினைப் பயனே.

(3) **“அருள் பேரொளியாக வழங்கப்பட்டாலும், கண்களை இறுக மூடிக் கொள்ளும் இருண்ட நெஞ்சங்களை உடையவர்களை ஏதும் செய்ய இயலாது”** - என்ற குருபாரம்பரிய வாசகத்தைக் குறிக்கின்றோம். புரிந்தால் புரிந்து செயல்படுக.

(4) **“எவனொருவன் தன்னை முழுமையாகக் குருவுக்குக் காணிக்கையாக்கிக் குருதேவரை முழுமையாகப் பத்தி செய்து வாழுகின்றானோ; அவனுக்குள் குருதேவர் வாழ ஆரம்பித்திடுவார். அதன்பிறகு, அவன் குருதேவராகவே தனது சொல்லிலும், செயலிலும் வாழ்ந்திடுபவன் ஆகிறான். அப்படியல்லாமல், உதட்டளவில் ‘குருதேவருக்குள் நான், எனக்குள் குருதேவர்’ என்று திரிபவன் எந்த நொடியிலும் எதிர்பாராமல் மாபெரும் வீழ்ச்சியையும், தாழ்ச்சியையும் பெற்றுக் குருத் துரோகியாகவும், குரு விரோதியாகவும் அறிமுகப்பட்டிட நேரிடும். எனவே, இந்துமத வளவளர்ச்சிக்காகவும், வலிமைச் செழிச்சிக்காகவும், ஆட்சிமாட்சிக்காகவும் உழைப்பவனே சிறந்த அருளாளனாகத் தேர்ந்திடுவான்”** என்பதுதான் பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும் இந்துமத அருளுலகப் பயிற்சியாளர்களுக்கு விடுத்துக் கொள்ளும் அறிவுரை.

(5) குருதேவர் தமது பயிற்சிக் காலத்திலும், முயற்சிக் காலத்திலும் மேலூர் காரியேந்தல்பட்டி குருகுல வட்டாரத்தில் இருந்தது போலவே, நாமக்கல் வட்டாரக் கடந்தப்பட்டியில் அருள்மலையாகவே செயல்பட்டிருக்கிறார். அதன்விளைவுதான் கடந்தப் பட்டியில் (இராசிபுரம் அருகில் உள்ளது நாமக்கல் வட்டம், சேலம் மாவட்டம் - 637018) இன்றைக்குத் தங்களைப் போன்ற அருளாளர்கள் அருளுலகமே வியக்கத் தக்க அளவில் வெளிப்பட்டிருக்கிறார்கள். சுமார் 20 பேர் கடந்தப்பட்டியில் சித்தரடியான்களாக, சித்தரடியாள்களாக,

சித்தரடியார்களாகச் சேர்ந்திருக்கின்றீர்கள் என்றால் அதில் முக்கால் பங்குக்கு மேல் அருளாற்றல் மிக்கவர்களாகவே இருக்கிறார்கள். அதிலும் உலகம் முழுதும் அருள் வழங்கும் பேராற்றல் பெற்றவர்களும் இருக்கிறார்கள். ஆனால் மதுரை, நெல்லை, திருச்சி, தஞ்சை, சேலம், வேலூர், கோவை, சென்னை, புதுக்கோட்டை, ... போன்ற பெரிய பெரிய நகரங்களில் ஆண்டுக் கணக்கில் செயல்பட்டும் கூடத் தேர்ந்தெடுத்த அருளாளர்கள் என்று சிலரைக் கூட உருவாக்க முடியவில்லை. தங்கள் ஊர் போக்குவரத்து வசதியில்லாத குக்கிராமம். கிடைத்திருப்பவர்களில் படிப்பிலும், பணத்திலும், வசதி படைத்தவர்களே அதிகம் இல்லை. எனவேதான், தங்கள் ஊரை அருளுலகின் கருவூலமாகவும், விதைப் பண்ணையாகவும் வருங்காலத்தில் முழுமையாகத் தயாரிக்க முடியும் என்ற நம்பிக்கையோடும், பூரிப்போடும் இவ்வஞ்சல் எழுதப்படுகிறது.

(6) சற்றும் எதிர்பாராமல் இவ்வளவு பெரிய நிலைக்குச் சென்றிருக்கிறீர்கள். எனவே, எச்சரிக்கையோடு செயல்படுங்கள். பொறுப்போடும், பொறுமையோடும் செயல்படுங்கள். எக்காரணம் பற்றியும் ஆணவமோ, கர்வமோ, குருவாணையை மீறிச் செயல்படும் நிலையோ வந்து விடக் கூடாது. முன்னை விடப் பன்மடங்கு பணிவோடும், துணிவோடும் ஆனால் கனிவோடும், அடக்கத்தோடும், அன்போடும், நட்போடும், பற்றோடும், பாசத்தோடும் அனைவரும் பழகிட வேண்டும். அதுதான் உங்களை வளர்க்கும். எச்சரிக்கை! எச்சரிக்கை! எச்சரிக்கை!

(7) உடனே இவ்வஞ்சலை அனைவருக்கும் படித்துக் காட்டுங்கள். இரண்டு பேனா நகல் எழுதி ஒன்றை வேம்படிதாளம் சீ.மணி அவர்களுக்குத் தந்து நகலெடுத்து எல்லா வட்டாரங்களுக்கும் அனுப்பக் கூறுங்கள். தாள், நகல் தாள் (கார்பன்) முதலியன வாங்கித் தந்து சீ.மணியிடம் நகல் தயாரித்து அனுப்பக் கூறுங்கள்.

தங்கள் கைப்பட எண்ணற்ற நகல்கள் இந்த அஞ்சலுக்குத் தயாரித்து முக்கியமான முகவரிகளுக்குத் தங்களின் அறிமுகத்தோடு அனுப்புங்கள். தலைமைப் பீடத்திற்கு மூன்று பேழை நகல்கள் அனுப்ப வேண்டும். தங்களுக்கு அருளுலக முக்கியத்துவமும், சிறப்பும் இருக்கின்றது. எனவே, தங்கள் ஊரில் உள்ள அனைவருக்கும் இதன் நகல்களைத் தயாரித்துத் தந்திடுங்கள். வெளியிடங்களுக்கு அனுப்பும் நகல்களில் சிவப்பு மையில் 'தலைமைப்பீடத்திற்கு 8 பேழை நகல் அனுப்புக' என்று எழுதி அனுப்பிடுக.

**அஞ்சல் நாயகம்,**
**இளந்துறவி சுந்தரானந்தா.**
**6/4/88.**

<u>நகல் எழுதுபவர்</u>:-

அருள்மிகு திருச்செங்கோடு உமையொரு பாகன் சன்னிதானம், அருள்மிகு எருமைநாட்டு வெல்போர்க் கொற்றவை சன்னிதானம், அருள்மிகு அரிசிக்கரை புத்தூர் படிக்காசளித்த ஈசுவரர் அழகாம்பிகை சன்னிதானம், சித்தரடியார், சித்தர் மகன் ச.ஏகாம்பரம். கடந்தப்பட்டி.

**//உண்மை நகல்//**
**//மூலம்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது.//**

# நமது வரலாறுகளைக் காத்துத் தருவது நமது மதம்தான்

தலைமைப்பீடம்,
13.5.88.

அருள்மிகு பழனியாண்டவர் சன்னிதானம் சித்தரடியான் திரு ஆர்.இராமசாமி அவர்களுக்குக் குருதேவர் தம் கைப்பட எழுதும் திருவோலை:-

1. தங்களின் 10.5.88ஆம் நாளைய அஞ்சல் கண்டோம். இதற்கு முன் தாங்கள் எழுதிய அஞ்சல்களில் ஒன்றிரண்டே கிடைத்தது. அவையும் பூசையில் வைக்கப்பட்டு அருளுலகில் ஒப்புதல் கிடைக்கவில்லை. - **அருளாணை.**

2. இனிய நண்ப! இயேசுநாதரை அவருடைய அடியார்களில் ஒருவர் காட்டிக் கொடுத்த நிலை வந்து விடக் கூடாது. நமது அடியார்கள் ஒற்றுமை, பாசம், பற்று, நட்பு, விட்டுக் கொடுத்து, ஒத்துப் போகும் பண்புடையவர்களாக இருக்க வேண்டும். யார்? எவ்வளவு காலம்? உயிரோடிருப்பீர்கள் என்பதே உங்களுக்குத் தெரியாது. வீணான போட்டி, பொறாமை, வீம்பு, அகம்பாவம், ஆணவம், சண்டை சச்சரவு என்று வாழும் சிறுமுகை அடியார்கள் என்ற பழிச் சொல் இன்னும் வளரக் கூடாது! எல்லோரும் ஒன்றுபட்டுச் செயல்பட முடியாத போது, மதவழிப் புரட்சி! இன விடுதலை! மொழி விடுதலை! பண்பாட்டு விடுதலை! சமுதாயச் சீர்திருத்தம்! உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு! முதலியவை எல்லாம் எப்படி முடியும்? என்றைக்கு முடியும்?

3. எமது வெளியூர் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் தங்களால் கலந்து கொள்ள இயலாது என்பதாலேயே உங்களுக்குத் தொல்லை கொடுக்க விரும்பவில்லை. நாளை சனிக்கிழமை 14.5.88 முதல் 19.5.88 முடிய வேலூரில் பெ.சுப்பையா B.E. (Divisional Manager, PATC, 2-B, யாதவத் தெரு, சங்கரம்பாளையம், வேலூர்-632001) அவர்கள் இல்லத்தில் தங்கிப் பூசைகள் செய்கிறோம். குடும்பத்துடன் பூசையில் முழுமையாகப் பங்கு பெறும் பக்குவமும், ஆர்வமும், துணிவும் இருப்பின் விளக்கமாகக் கூறி, பிறகு குடும்பத்துடன் வருக. பூசையில் உங்களைப் போல் உங்கள் துணைவியாரும் முழுமையாகப் பங்கு பெற முடியும் என்றால்தான் ‘சிவசத்திப்’ பூசைகளில் பங்கு பெறலாம்.

<u>குறிப்பு</u>:-

அ) பிப்ரவரி 25, 26 ஆகிய இருநாட்களில் இந்த ஆண்டில் (1988) வடஆற்காடு மாவட்ட வேலூரில் நடந்த மிகப் பெரிய கன்னிப் போரில் 25.2.88 இரவு கிடைத்த வெற்றி. மறுநாள் 26.2.88இல் கொல்லிமலை, பச்சைமலை, விந்தியமலை, இமயமலை,..... வட்டார மந்திரவாதிகளால் விசுவாமித்திரர் தலைமையில் மிகச் சூழ்ச்சியாகச் சிதைக்கப்பட்டது. அது முதல் பல சோதனைகள். 10.5.88 இரவில் சுமார் 3 மணி நேரம் 11 முதல் 2½ வரை <u>உகஅற நாயகி</u>க்கு வழங்கிய விளக்கங்களால் <u>உகஅற நாயகி</u>யே இந்த அருட்போரில் கன்னிப்போரில் நேரில் பங்கு பெற விருப்பமுற்றார்கள். 11.5.88 அன்று இரா.சீனிவாசன், இரா.முத்துராசமூர்த்தி, சீ.நாகானந்தம் மூவருக்கும் கன்னிப்போரில் பெருந்தளபதிப் பொறுப்பில் மாலைகள் வழங்கப்பட்டு (கண்ணாடி மாலைகள்) விட்டன. எனவே, தாங்களும் குடும்பத்துடன் நேரில் வந்து பங்கு பெறலாம். <u>அவசியம் வருக</u>. - **குருவாணை**.

ஆ) எதிலும் பங்கு பெற இயலாதவர்கள் சுற்றுப்பயணத்தினைப் பற்றி தெரிந்து பயனில்லை என்று ஏற்கனவே யாமெண்ணியது மெய்யாகி விடக் கூடாது. - **திருவாணை.**

4. இராகுதேவன் வாரிசு மோகனசுந்தரம் எமது நெருங்கிய உறவினராக இருந்தும், மிகப்பெரிய சித்திகள் அவருக்கு வழங்கப் பெற்றும்; அவர் இயக்கத்தில் நேரடியாகப் பங்கு பெறுமல் உள்ளார். ஊழ்வினையா? விதியா? மதியா? யாரையும் சித்தர் நெறிப்படி வற்புறுத்த இயலாது. அவர் என்றைக்குச் செயல்பட விரும்பினுலும் வரட்டும்.

5. அங்கு யாம் வந்தபோது, தங்கள் துணைவியார் அவர்களையும் அருட்செல்வியாக, சித்தரடியாளாக ஏற்று அருட்பட்டம் வழங்கினேம். ஆனுல், அவர்கள் பூசையைத் தொடரவில்லை. நேரடி அஞ்சல் தொடர்பும் வளர்க்கவில்லை. இயக்கப் பணிகளிலும் ஈடுபடவில்லை. அவர் விருப்பமறிந்து எழுதுக.

6. தாங்கள் தங்கள் விருப்பம்போல் ஓர் இ.ம.இ. கிளை, ஓர் அ.வி.தி. கிளை என்று சில அமைப்புக்களை அமைக்க வேண்டும். சுமார் பத்துப் பதினைந்து பேர்களையாவது சேர்த்துப் படிப்பகம், அருட்கோட்டம், சுற்றுப்பயணம், குருதேவர் அறிக்கைச் சந்தா, புத்தக விற்பனை என்று செயல்பட வேண்டும். உங்களை முழுமையாக வரவேற்கிறேம். ஆதரவு தருகிறேம். குடும்பத்துடன் செயல்படுக! வெற்றி பெறுக!

7. எல்லா மதங்களுக்கும் வெளிநாடுகளின் உதவி, உள்நாட்டிலுள்ள பணக்காரர்களும் உதவுகிறுர்கள். இதனுல், அம்மதங்களை விளக்கும் வரலாறுகள், தத்துவங்கள், செயல்முறைச் சித்தாந்தங்கள், நடைமுறைகள், அருளாளர்களின் வாழ்வியல்கள், சாதனைகள், போதனைகள், பத்தி இலக்கியங்கள், புகழ்மிக்க கோயில்கள் பற்றிய விவரங்கள் முதலியவை எல்லாம் அழகழகான ஓவியங்களுடன், எழில்மிகு புத்தகங்களாக

அச்சிடப்பட்டு இனமாகவும், மலிவு விலையிலும் வழங்கப்படுகின்றன. பல பயிற்சிப் பள்ளிகளும், கல்லூரிகளும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படுகின்றன. மதக் கல்வி கற்றவர்களுக்கு நல்ல சம்பளத்துடன் வேலையும், பிற வசதி வாய்ப்புக்களும் வழங்கப்படுகின்றன. பொதுவான கல்வி நிலையங்களிலும், மருத்துவ மனைகளிலும், பிற நிறுவனங்களிலும் கூடத் தங்களின் மதத்தை வளர்க்கும் பணிகள் நிகழுகின்றன.

8. நமது இந்துமதத்தில் நாத்திகர்கள், பகுத்தறிவுவாதிகள், கோயில் சொத்துக்களைக் கொள்ளையடிப்பவர்கள்; மதத் தலைவர்களையும், நிறுவனங்களையும், நிர்வாகங்களையும் எதிர்த்துக் கேலியும், கேடும் செய்பவர்கள்; வீணான ஆடம்பர விழாக்களில் பணத்தைச் செலவழிப்பவர்கள்; பத்தியின் பெயரால் கடன்பட்டுக் கண்மூடித்தனமான செயல்களில் பணத்தைச் செலவழிக்கும் அறியாமை மிகுந்த அப்பாவி மக்கள்; மதத்தின் பெயரால் வயிறு பிழைக்கும் புராணிகர்கள், சொற்பொழிவாளர்கள், கலையுலகத்தார்கள், போலிப் பத்தர்கள், மந்திரவாதிகள்,..... மதம் பற்றிய காட்டுமிராண்டித்தனமான கற்பனைகளும், கதைகளும், மூடப் பழக்கவழக்கங்களும், மடமைகளும், ..... மாறாமல் பாதுகாக்கும் மடாதிபதிகள், ..... என்றிப்படிப் பட்டியலிட்டுக் கொண்டே செல்லும் இழிநிலை! பழிநிலை! அழிநிலை! ஒழிநிலை! .... நீடிக்கிறது. என்ன செய்வது?

9. நமது மதம் ஒரு காலத்தில் பகுத்தறிவுவாதிகள், மேதைகள், அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், சீர்திருத்தக் கலைஞர்கள், மெய்யான பத்தர்கள், தலைவர்கள், சித்திமிக்க மடாதிபதிகள் முதலியோரைப் பெற்றிருந்தது. நமது கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன. வரலாறுகள், இலக்கியங்கள், தத்துவ நூல்கள், சித்தாந்த நூல்கள், ..... முதலியவை தொடர்ந்து படியெடுக்கப்பட்டும், அச்சிடப்பட்டும் மக்களுக்கு இனமாகவும், மலிவு விலையிலும் வழங்கப்பட்டன. ஆனால் இன்றோ! ?!?!?! ... ... ...

10. நண்ப! நமது மதம்தான் நமக்குத் தன்னம்பிக்கை, தன்மானம், இனமானம், மொழியுணர்வு, இன உரிமை, பண்பாட்டுப் பிடிப்பு, நாகரிகப் பற்று, இன விடுதலை, மொழி விடுதலை, உரிமை வாழ்வு, ஒற்றுமை வாழ்வு, ஒருமைப்பாடு, ..... முதலியவைகளை வழங்கிடும்! வளர்த்திடும்! இன்னும் சொல்லப் போனால், நமது வரலாறுகளையும், வாழ்வியல்களையும், இலக்கியங்களையும், அருளுலகப் பொருளுலகச் சாதனைகளையும் காத்துத் தருவது நமது மதம்தான்! நமது மதம்தான்!! நமது மதம்தான்!!! எனவே, **மிகப் பெரிய தியாகங்களையும், வீர தீரச் செயல்களையும் செய்துதான் நாம் நமது மதத்தைக் காப்பாற்றிட வேண்டும்**. இதற்காக, இந்து மதத்தின் மூலவர்களாகவும், காவலர்களாகவும் உள்ள தமிழர்களை உலக அளவில் விழிப்படையச் செய்ய வேண்டும். தக்க அருளாளர்களையும், மத ஆர்வலர்களையும், மெய்யன்பர்களையும் தேர்ந்தெடுத்து நமது இயக்கத்தில் பயிற்சி கொடுத்தேயாக வேண்டும்.

11. நண்ப! இப்பொழுது உள்ளதை விடத் தமிழகம் முழுதும் பல மடங்கு அருட்கோட்டங்கள், இ.ம.இ. கிளை நிலையங்கள், அ.வி.தி. பணிமனைகள், யாகசாலைக்குரிய அருள் இல்லங்கள் தோற்றுவிக்கப்படல் வேண்டும். வாரத்தின் ஏழு நாட்களிலும் பூசை, ஐந்தீ வேட்டல், முத்தீ ஓம்பல், தவம், ..... மூலம் மக்களுக்கு அருள் வழங்கி மிகுதியான நலம் விளைவிக்க வேண்டும். பாழடைந்த எல்லாக் கோயில்களும் புதுப்பிக்கப்பட்டு ஆறுகாலப் பூசையையும், தேர்த் திருவிழாக்களையும் பெற்றுச் சிறக்க வேண்டும். ஏற்கனவே உள்ள கோயில்களைப் பாடி வீடுகளாகவும், பாசறைகளாகவும் பயன்படுத்தியே அருட்படை தயாராக வேண்டும். சொந்த விருப்பு வெறுப்புக்களால் பிரிவு, பகை கூடாது.

12. நண்ப! தாங்கள் மேட்டுப்பாளையத்திலிருந்து இரண்டு கல் தொலைவில் உள்ள வடமங்கலக்கரைக் கிராமம் மலைக்காரர் தோட்டத்தில்

தாத்தா ‘ஆதிக் கருப்பராயர்’ வெளிப்பட்டுப் பூவாத்தாள் என்ற பெண் மூலம் மக்களுக்கு அருள் வழங்குவது பற்றிக் குறிப்பிட்டுள்ளதை யாம் அறிந்தோம். கவலை வேண்டாம். இ.ம.இ. உறுப்பினராகுமாறு கூறுங்கள். அ.வி.தி.யில் குடும்பத்தாரைச் சேர்த்திடுங்கள். குருதேவர் அறிக்கைச் சந்தா ரூ.36/- கட்டச் சொல்லுங்கள். இதுவரை வெளிவந்துள்ள புத்தகங்களையெல்லாம் சுமார் ரூ.200/- கட்டிப் பெற்றுப் படிப்பகம் (நூலகம்) வைக்கக் கூறுங்கள். கோவை மாவட்ட அமைப்பாளர், மேற்கு மண்டல இ.ம.இ., அ.வி.தி. தலைவர், செயலாளர், மேற்கு மண்டல இ.ம.இ., அ.வி.தி. தலைவர், செயலாளர், ...... ஆகியோரை வரவழைத்துக் கிளை அலுவலகத்தைத் திறந்திடுங்கள்; மெய்ஞ்ஞானக் கொடி ஏற்றிடுங்கள். விரைவில் பிச்சைமணி, உலகநாதன், கங்காதரக்குமார் வருவார்கள்.

13. வாய்ச்சொல் வீரராக இல்லாமல் செயல்படுக. Letter Pad, Notice அச்சடியுங்கள். “தாத்தா ஆதிக் கருப்பராயர் அருட்கோட்டம்” என்று பெயர் வையுங்கள். சிறுமுகை ஆர். இராமசாமியாகிய தாங்களே கோவை மாவட்ட அ.வி.தி. அமைப்பாளர் என்று அறிவிக்கப்படுகிறீர்கள். எனவே, இதன்படி அனைவரிடமும் அன்போடு, நட்போடு, பாசத்தோடு பழகிப் பல அருட்கோட்டங்களை உருவாக்குங்கள். ஆயிரக்கணக்கில் அ.வி.தி. உறுப்பினர்களையும் (ஆண்டுச் சந்தா ரூ.2/-), இ.ம.இ. உறுப்பினர்களையும் (ஆண்டுச் சந்தா ரூ.60/-) சேர்த்திடுங்கள். உங்கள் விருப்பம் போல் இணை அமைப்பாளர், துணை அமைப்பாளர், செயலாளர், இணைச் செயலாளர், துணைச் செயலாளர், ஐம்பெருங்குழு, எண்பேராயம் ..... முதலியவைகளை அ.வி.தி. அமைப்புப் பணிக்கு ஏற்படுத்திக் கொள்ளுக. **குருவாணை** 13.5.88.

14. தாங்கள் விரும்பினுல் அருட்செல்வி பூவாத்தாள், தங்கள் துணைவியார், நண்பர்கள் .... எல்லோருடனும் வேலூர் வந்து சந்தியுங்கள். உடனே, வேலூர் முகவரிக்கும் தந்தி மூலம் தங்கள் வருகையை அறிவியுங்கள். உடன் பதில். **குருவாணை**.

**குறிப்பு**:- எல்லோரையும் சேர்த்துக் கொண்டு இணைந்து செயல்படுங்கள். நேரில் விளக்கம், ஆற்றல், சக்கரம், ..... பெறலாம்.

**அன்பு**

**நான்குயுக நாயகம்,**

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.**

**13.5.88.**

**//உண்மை நகல்//**

**நகலெழுதியது:** இளந்துறவி சுந்தரானந்தன், 17.5.88.

நெல்லை மாவட்ட சித்தரடியார் மூவர் குழு:
சித்தரடியார் இ.பூவலிங்கம், பாளை ஆயிரத்தம்மன் சன்னிதானம்,
சித்தரடியார் இ.வைத்திலிங்கம், பாளை சங்கிலிபூதத்தார் சன்னிதானம்,
சித்தரடியார் பி.பரமசிவம், பத்தமடை அய்யனர் சன்னிதானம்.

**//மூலம்: தட்டச்சு நகலாகக் கிடைத்தது.//**

ஓம்

தலைமைப்பீடம்,

9/5/94, காலை 5:45 மணி.

# பிரம்மை, பிரேமை - சொல் விளக்கம்.

பிறம்மை = பிறப்புக்கு அப்பாற்பட்டது.

= மனித இயல்புக்கு அப்பாற்பட்டது.

பொறுக்காமல் இருப்பது = பொறுமை.

கெட்டகாலம் = போறுமை.

பிறவாமை, இறவாமை, மறவாமை - மை விகுதி வருவது தமிழ்ப் பண்பாடு.

அதாவது, பிறம்மை என்பதன் பொருள்:- மனிதனுடைய ஆசை, பற்று, கோபம், தாபம் முதலிய அனைத்துக்கும் அப்பாற்பட்டு இறைவனிடம், கடவுளிடம் அன்பு செலுத்தி மயங்குவது.

இறைவனிடம் ஒன்றி விடுவது:- மனிதன் தன் குடும்பத்தாரோடு, சொந்தக்காரர்களோடு ஒன்றி வாழ வேண்டும். அதுதான் இயல்பு! இயற்கை! இந்த இயல்புக்கும், இயற்கைக்கும் அப்பாற்பட்டதே இறைவனிடம் ஒன்றுவது.

புறம் என்பது - புறத்தார், அன்னியர், மற்றவர், வேறுனவர், நம்மைச் சாராதவர் - எனவே, இறைவனிடம் ஒன்றுவது இயல்பு அல்லாத உணர்வு, பிற உணர்வு; நம்மைச் சேர்ந்த உணர்வு அல்ல.

கடவுள் மனிதர்களை சேர்ந்தவர் அல்ல => பிறர்.

கடவுளைப் பற்றிய செய்திகள், கடவுளோடு தொடர்பு கொள்ளும் மதம் மனித வாழ்க்கையில் இயல்பாக இருக்கக் கூடிய ஒன்றல்ல.

கடவுள் - பிறர்.

கடவுள் நம்மவர் அல்ல, பிறர்.

அந்தப் பிறரோடு ஒன்றி, மனம் ஒன்றி, ஐக்கியப்பட்டு, இரண்டறக் கலந்து அனைத்தையும் மறப்பதுதான் பிறம்மை. இந்தச் சொல் இந்து வேதத்திலே, பழநியாண்டவர் காயந்திரியில் இருக்கிறது. பிறேம்மை என்ற சொல்லும் இருக்கிறது. வல்லின எழுத்து 'ற' போட்டு இருக்கிறது. வல்லின எழுத்து 'ற' போட்டு பிறம்மை, பிறேம்மை என்ற சொற்கள் வேதத் தமிழில் இருக்கின்றன. **இது நாற்பத்து மூன்று இலட்சம் ஆண்டுகளுக்கு முந்திய சொல்.** மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வந்த சமசுக்கிருதத்தில் இடையின 'ர' பயன்படுத்தி பிரம்மை, பிரேம்மை (=> பிரேமை) என்று உச்சரித்தார்கள். எனவே, இச்சொல்லையே சமசுக்கிருதச் சொல்லாக மாற்றி விட்டார்கள். தமிழனும் நம்பி ஏமாந்து விட்டான்.

வெள்ளைக்காரன்; மதுரையை majura என்றும்; தூத்துக்குடியை Tuticorin என்றும்; உதகையை ooty என்றும்; திருச்சியை Trichy என்றும்; மயிலாடும்சோலையை மாயவரம் என்றும் தன் மொழிக்கு ஏற்ப உச்சரித்து அதனையே இப்பொழுது தமிழிலே உச்சரிக்கும் நிலை வந்து விட்டது. இதுபோல்தான் சமசுக்கிருதக்காரர்கள் தமிழில் இருந்த சொல்லை பிரம்மை, பிரேமை என மாற்றினார்கள். ஆனால், இந்துவேதம்தான் தமிழ்மொழியைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது.

**//உண்மை நகல்//**
**//மூலம்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# ‘தமிழனுக்கென்று என்னென்ன சிறப்புக்கள் உள்ளன?’

(i) கடவுள்களில் அநேகமாக அதிகமாக தமிழர்களே இருக்கிறார்கள். அல்லது தமிழர்களே கடவுளர்களாக இருக்கிறார்கள். **உதாரணம்:-** தமிழிலுள்ள இந்துவேதத்தில்தான் 8,84,736 வகைக் கடவுள்கள் இருக்கிறார்கள். அனைவரும் தமிழர்களே!

(ii) தமிழர்களில் கடவுளர்களாகவே மாறியவர்கள், மாறிக் கொண்டிருப்பவர்கள், கடவுளர்களாகவே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் கணக்கற்றோர் இருக்கிறார்கள்.
**உதாரணம்:-** உலகிலேயே கடவுள் நேராக வந்து அருள் தந்து கடவுள்களாக ஆக்கியவர்கள் 64 பேர்கள் (சிவபெருமான்கள்).

கடவுளர்களைக் கண்டு கடவுளர்களாகவே மாறியவர்கள் 63 நாயன்மார்கள், 12 ஆழ்வார்கள், 96 தொகையடியார்கள், அருணகிரியார், பட்டினத்தார், பத்திரகிரியார், தாயுமானவர், இராமலிங்க அடிகளார், இலைமறைகாயாக வாழும் 48 வகைச் சித்தர்கள்.

இவற்றிற்கெல்லாம் அடிப்படை; மனிதரைக் கடவுளாக்கும் ‘காயந்திரி மந்திரம்’ என்ற ஒன்று எல்லா மானுடர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. வெளியிடப்படாத 23 வகைக் காயந்திரிகள் - மனிதரைக் கடவுளாக்கும் பூசைமொழிகள் உள்ளன.

எனவே, <u>தமிழனுக்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்துக்கும், தமிழ் நாட்டுக்கும் தனித்தன்மை உண்டு, தனிச்சிறப்பு உண்டு, தனிப்பெருமை உண்டு, தனியுரிமை உண்டு. வேறெந்த மொழிக்கோ, இனத்துக்கோ, நாட்டுக்கோ இந்த உரிமை கிடையாது! கிடையாது!! கிடையாது!!! கிடையவே கிடையாது</u>. ... ... ...

**//உண்மை நகல்//**

**// ‘சேலம் பயணத்தில் விடுதியில் குருதேவர் கூறியது’ என்ற தலைப்பில் இருந்த கையெழுத்துப் பிறதி நகலிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி. //**

**“இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”**

**- குருபாரம்பரிய வாசகம்.**





மெய்ஞ்ஞானக்கொடி



தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின்** குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

தமிழனுக்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்துக்கும்,
தமிழ் நாட்டுக்கும் தனித்தன்மை உண்டு, தனிச்சிறப்பு உண்டு, தனிப்பெருமை
உண்டு, தனியுரிமை உண்டு. வேறெந்த மொழிக்கோ, இனத்துக்கோ, நாட்டுக்கோ
இந்த உரிமை கிடையாது! கிடையாது!! கிடையாது!!! கிடையவே கிடையாது.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609
at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://books.gurudevar.org
https://gurudevar.in https://gurudevar.org
https://induism.org Email: indhuism@gmail.com